# பாடநெறி வழிகாட்டி

# 2024




கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

கொழும்பு இறையியல் கல்லூரி

*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

# பாடநெறி வழிகாட்டி
# 2024

தமது வாழ்வை குறித்த மேலான அதிகாரம் தமக்கே இருப்பதாக தனிநபர்களால் பெரும்பாலும் கருதக்கூடிய மதச்சார்பின்மை அதிகரித்து வரும் எமது இன்றைய உலகில், ஆண்டவரின் வார்த்தையினால் வடிவமைக்கப்பட்ட ஓர் யதார்த்தத்தை நிலைநிறுத்துவதில் உறுதியாக தரித்திருப்பது கிறிஸ்துவை பின்பற்றுபவர்களுக்கு மிக மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. வேதாகமத்தை மேலான அதிகாரமாக பற்றிக்கொள்வதானது வாழ்வை குறித்த எமது அணுகுமுறையில் மாத்திரமல்ல, எமது சிந்தனைகள், பிரதிபலிப்புகள், அத்தோடு சிக்கலான மற்றும் இரு துருவங்களாக முரண்பட்டு நிற்கும் பிரச்சனைகளான, விரிவடைந்து செல்லும் காலநிலை மாற்றம், பாலினம், மரணம், நிதி, வேலை, ஓய்வு, உறவுகள், அன்பு, அத்துடன் எதிர்க்கும் உலகக்கண்ணோட்டங்கள் தொடர்பாகவும் எம்மை வழிநடத்துகின்றது.

இதை கருத்திற்கொள்ளுங்கள்: எமது வாழ்வு என்ன செய்தியை கூறுகிறது? எமது வாழ்வின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஆண்டவரின் அதிகாரமே மேலானது என்பதை அது தெளிவாக விளக்குகின்றதா?

தேவனுடைய வார்த்தையில் உறுதியாக வேரூன்றிய கிறிஸ்துவை மையமாக கொண்ட, ஆவியால் ஈர்க்கப்பட்ட யதார்த்தத்தில் நிலைத்திருப்பதற்கான அறிவையும் ஆயத்தத்தையும் பெறுவதற்கான சத்தியத்தை CTSஇல் கண்டறியுங்கள்.

**கொழும்பு இறையியல் கல்லூரியானது:**
**இலங்கை நாடாளுமன்றத்தின் 1971 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தில் இணைக்கப்பட்ட கொழும்பு வேதாகம கல்லூரியினது ஒரே பிரிவும் இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமையும், ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரமும் கொண்டது.**

# தொடர்பு கொள்வதற்கான தகவல்

| | |
|---|---|
| **பதிவாளர்** | registrar@cts.lk |
| **வடகொழும்பு கல்வி நிலையம்** | nc@cts.lk |
| **ஒருங்கிணைப்பாளர்: கல்வித்திட்டங்கள்** | student.services@cts.lk |
| **மாணவர் கணக்கியல்** | student.accounts@cts.lk |
| **மாணவர் புலமைப்பரிசில்கள்** | scholarships@cts.lk |
| **நூலகம்** | library@cts.lk |
| **தகவல் தொழில்நுட்பம்** | it@cts.lk |
| **பிரயோக ஊழியப்பயிற்சி** | practicums@cts.lk |
| **ஆற்றுப்பணி கல்விப்பாடத்திட்டம்** | counselling@cts.lk |
| **முதுமாணிப்பட்ட கற்கைநெறி** | ma@cts.lk |
| **சிறுவர் ஊழிய களம்** | cm@cts.lk |
| **கல்விப்பீடாதிபதி**<br>போதகர். ரவின் கல்தேரா | ravin@cts.lk |
| **உதவி கல்விப்பீடாதிபதி**<br>திரு. ஜுலியன் தேவதாசன் | julian@cts.lk |

**+94 11 2890809 | www.cts.lk**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| | *பக்கம்* |
| **பொதுவான தகவல்கள்** | **4** |
| | |
| **தவணை 1: ஜனவரி - ஏப்ரல்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **6** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **7** |
| வாரநாள் வகுப்புக்கள் | **8–11** |
| மாலைநேர வகுப்புக்கள் | **11** |
| CTSஇன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **12–13** |
| | |
| **தவணை 2: மே - ஓகஸ்ட்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **16** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **17** |
| வாரநாள் வகுப்புக்கள் | **18–21** |
| மாலைநேர வகுப்புக்கள் | **21** |
| CTSஇன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **21–22** |
| | |
| **தவணை 3: செப்டெம்பர் - நவம்பர்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **24** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **25** |
| வாரநாள் வகுப்புக்கள் | **26–28** |
| மாலைநேர வகுப்புக்கள் | **29** |
| இளமாணிப்பட்டத்திற்கான கருத்தரங்கு பாடம் | **30** |
| CTSஇன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **30–31** |
| | |
| **விரிவுரையாளர் விபரங்கள்** | **32–36** |
| | |
| **CTS கற்கைநெறிகள்** | **37** |
| | |
| **சிறுவர் ஊழிய களம்** | **38–39** |

# பொதுவான தகவல்கள்

**CTS பாடநெறிகள்:**

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறியானது, வாரத்திற்கு ஒரு தடவையாக 13 வாரங்களில் நடாத்தப்படும்.
- குறுங்கால பாடநெறியானது, நான்கு முழுநாட்கள் அடங்கிய அதிக எதிர்பார்ப்புள்ள பாடத்திட்டமாகும்.
- பெரும்பாலான பாடநெறிகள் 24 மணித்தியாலங்களை கொண்டதாக அமைந்துள்ளதுடன்; சில 36 மணித்தியாலங்களை கொண்ட பாடநெறிகள் மாத்திரமன்றி 24 மணித்தியால வகுப்பறை பாடவேளையுடன் 12 மணித்தியாலங்களை கொண்ட பிரயோகப்பயிற்சியையும் உள்ளடக்கிய பாடநெறிகளும் உள்ளன.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

- **பௌதீகநிலை:** கொஹுுவலை மற்றும் வடகொழும்பு CTS வளாகத்தில் நடைபெறும் பாடங்கள்.
- **இயங்கலை:** Zoom வழியாக நடைபெறும் பாடங்கள். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.
- **கலப்புமுறை:** மேற்குறிப்பிட்ட பௌதீகநிலை, இயங்கலை ஆகிய இரு முறைகளையும் உள்ளடக்கி பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும். சில வாரங்கள் உங்கள் வகுப்புக்கள் கொஹுுவலை CTS வளாகத்திலும், ஏனைய வாரங்கள் இயங்கலை வழியாகவும் நடத்தப்படும். பாடநெறியின் ஆரம்பத்திலேயே உங்கள் விரிவுரையாளர் இது குறித்த அட்டவணையை உங்களுக்கு அறிய தருவார்.

**CTS பாடநெறி கட்டணங்கள்:**

ஒரு பாடத்திற்கான அறிமுக கட்டணமானது ரூ 5000/= ஆகும்.

* மிகவும் மானிய விலையில் இறையியல் கல்லூரியானது பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு; நமது ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு; இந்த விசேட ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**CTS பாடநெறிகளுக்கு பதிவு செய்வது எப்படி?**

பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப்படிவத்தை https://www.cts.lk/online-registration/ எனும் இணையத்தளம் வழியாக அல்லது கொஹுுவலை CTS இலுள்ள மாணவர் கணக்கியல் பிரிவிற்கு கையளிக்கவும். பதிவுக்கட்டணங்களை https://www.cts.lk/payment/ வழியாக, வங்கி பரிமாற்றம், கடனட்டை அல்லது பணத்தினூடாக செலுத்தலாம்.
***தயவு செய்து அவதானிக்கவும்:*** *உங்களது பாடத்திற்கான கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே வகுப்பிற்கான உங்களது ஆசனம் ஒதுக்கப்படும்.*

**முக்கிய கவனத்திற்கு:** CTS பாடநெறி ஒன்றிற்கு முதல் தடவையாக பதிவு செய்பவர்கள் தமது சபை போதகரின் சிபாரிசு கடிதத்துடனேயே பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

**பதிவு செய்யும் நாட்களும் நேரங்களும்:**

குறிப்பிட்ட தவணைக்கான பதிவு செய்யும் இறுதிநாள் அத்தவணையின் ஆரம்ப தினமாகும்.

***தவணை 1: 8ஆம் திகதி ஜனவரி 2024***
***தவணை 2: 6ம் திகதி மே 2024***
***தவணை 3: 2ஆம் திகதி செப்டெம்பர் 2024***

*நீங்கள் எந்தவொரு வேலை நாளிலும் (திங்கள்-வெள்ளி) காலை 9.00 - மாலை 4.30 மணி வரை பதிவினை மேற்கொள்ளவும், பாடக்கட்டணங்களை செலுத்தவும் முடியும்.*

# தவணை 1

# 8 ஜனவரி – 6 ஏப்ரல் 2024

○ பௌதீகநிலை கல்வி | □ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 1 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ **கலாச்சார மானுடவியல்**<br>மு.ப.9:00-11:15<br>எஸ். கதிரேசப்பிள்ளை | ○ **வேதாகமத்தை கற்றுக்கொள்வது எப்படி?**<br>மு.ப.9:00-11:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **வியாக்கியானவியல்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **திருத்துதுப்பணிக்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **பிரச்சனையில் உள்ள குடும்பங்களுக்கு உதவுதல்**<br>மு.ப.9:00-11:30<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் |
| பிற்பகல் | ○ **ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்**<br>பி.ப.3:00-5:00<br>வனஜா ராஜ்குமார் | ○ **தேவனுடனான ஒரு நெருங்கிய உறவு**<br>பி.ப.3:00-5:00<br>இரா. ஹரிஹரன் | ○ **1, 2 தீமோத்தேயு**<br>பி.ப.3:00-5:00<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் | ○ **கற்கை முறைகள்**<br>பி.ப.3:00-5:15<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ★ **அப்போஸ்தலருடைய நடபடிகள்**<br>பி.ப.3:00-5:30<br>யொஹான் கிருஷ்ணகுமார் |
| மாலை | □ **யோசுவாவின் நூல்**<br>பி.ப.6:00-8:00<br>யோகநாதன் பகீரதன் | ○ **கிறிஸ்தவ உக்கிராணத்துவம்**<br>பி.ப.6:00-8:00<br>கிறிஸ்துமணி செல்லையா | | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## நேர அட்டவணை: தவணை 1 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **ஆலோசனை பணிக்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-11:00<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | | **ஆவிக்குரிய வரங்கள்**<br>மு.ப.9:00-11:15<br>எஸ். கதிரேசப்பிள்ளை | |
| மாலை | | **சிறுகுழுவொன்றை வழிநடத்தல்**<br>பி.ப.6:00-8:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | | **சங்கீதங்களை ஆராய்தல்**<br>பி.ப.6:00-8:15<br>காமினி ஜயந்த | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவணை 1 | 8 ஜனவரி – 6 ஏப்ரல் 2024

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### கலாச்சார மானுடவியல்

BTh|Dip விருப்பு

சகல மக்களும், கிறிஸ்தவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவரல்லாதவர்களாக இருந்தாலும், தங்கள் கலாச்சாரத்தின் கடலில் நீந்துகிறார்கள். இந்த பாடநெறியானது கலாச்சாரத்தின் கருத்தையும் அதன் முக்கிய துணை அமைப்புகளையும் ஆராய்வதோடு, திருச்சபை, நற்செய்திப்பணி மற்றும் கிறிஸ்தவ ஊழியம் ஆகியவற்றோடு எவ்வாறு தொடர்புறுகிறது என்பதை புரிந்து கொள்ள உதவுகிறது.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: ஜனவரி 15

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **எஸ். கதிரேசப்பிள்ளை**

### ஆமோஸ் தீர்க்கதரிசியின் நூல்

BTh|Dip விருப்பு

வரையறையில்லாத ஊழல், அநீதி, வன்முறைகள் என பல விடயங்களிற்கு எம்முடைய சமுதாயம் முகம் கொடுக்கின்றது. இந்நிலையில் தேவனுக்கு கனத்தை கொடுக்கத்தக்கதாக, சமுதாயத்தை மாற்றும் விதமாக எவ்வாறு மாறுத்தரத்தினை அளிப்பது? ஆமோஸின் வார்த்தைகள் இவ்விதமான சமகால பிரச்சனைகளிற்கு அற்புதமான விதத்தில் பொருத்தமானதாக அமைகிறது. இப்பாடநெறியானது நீங்கள் செல்வாக்கு செலுத்தக்கூடிய வட்டாரத்திற்குள் ஞானமாக சிந்திப்பதற்கும், இருப்பதற்கும், செயற்படுவதற்கும் வழிகாட்டியாக அமைகிறது.

12 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஜனவரி 8

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **வனஜா ராஜ்குமார்**

### வேதாகமத்தை கற்றுக்கொள்வது எப்படி?

BTh|Dip கட்டாயம்

வேதாகமத்தை நீங்களாகவே கற்றறிவதற்கான ஆற்றலை உங்களுக்கு தருவதுடன் சரியான கேள்விகளை கேட்பதற்கும், கற்றுக்கொண்டவற்றை சரியான முறையில் பிரயோகிப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட பாடமாகும். நீங்கள் ஆறு விதமான வேதாகம கற்கை முறைகளை கற்றறிந்து கொள்வதுடன் வேதாகம படிப்பிற்கு அத்தியாவசியமான ஆர்வத்தினை தூண்டும் கருவிகளிற்கு அறிமுகப்படுத்தப்படுவீர்கள்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: ஜனவரி 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## தவணை 1 | 8 ஜனவரி – 6 ஏப்ரல் 2024

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| ### தேவனுடனான ஒரு நெருங்கிய உறவு | **BTh \| Dip விருப்பு** |
|---|---|
| தேவனுடனான ஒரு நெருங்கிய உறவை விரும்பாதவர் எவருமில்லை. தேவனுடனான உறவை பெலப்படுத்தும் வழிமுறைகளை இனங்கண்டு, நீங்கள் உங்களது ஆள்தன்மை, கொடைகள் மற்றும் நேரம் போன்றவற்றை பயன்படுத்தி அவரை உங்கள் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் எவ்வாறு அன்பு செய்ய வேண்டுமென தேவன் விரும்புகிறார் என்பதை ஆராய உதவும் பாடநெறியாகும். | 12 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: பி.ப.3:00-5:00<br>ஆரம்பம்: ஜனவரி 9<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்:<br>**இரா. ஹரிஹரன்** |

| ### வியாக்கியானவியல் | **BTh \| Dip விருப்பு** |
|---|---|
| **விளக்கவுரை வரலாறும் விமர்சன முறைகளும்**<br>இப்பாடநெறியானது இறையியலின் தெளிவான மேம்பாட்டிற்கு வேதாகமமானது எவ்வாறு விளக்கப்பட்டது என்பதை ஆராய்வதுடன் வேதாகம விளக்கவுரைக்கான பல்வேறுபட்ட வியாக்கியான அணுகுமுறைகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. நீங்கள் உங்களுடைய ஊகிப்புக்களை ஆராய்ந்து பார்க்கவும், வேதாகமத்தை வாசிக்கும்போதும் விளக்கும்போதும் பயன்படுத்தக்கூடிய சிறந்த உபாய வழிமுறைகளை உருவாக்கவும் இப்பாடநெறியானது உதவியாக அமையும். | 12 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12.30<br>ஆரம்பம்: ஜனவரி 10<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்:<br>**ஜுலியன் தேவதாசன்** |

| ### 1, 2 தீமோத்தேயு | **BTh \| Dip விருப்பு** |
|---|---|
| **தலைமைத்துவ வாழ்க்கை முறை**<br>பவுல் வாலிபனான தீமோத்தேயுவிற்கு உபதேசிக்கும் இந்நூலின் வார்த்தைகள் மிகவும் அவதானமாக கற்க வேண்டியதொன்றாகும். இன்றைய உலகிலுள்ள பாரிய சவால்களின் மத்தியில் வாலிபர்கள் தலைமைப்பொறுப்பினை ஏற்பதற்கும், இன்றைய நடைமுறை பிரச்சனைகளின் மத்தியில் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களாக அவர்களை வழிநடத்துவதற்குமான ஆழமான கற்கையை இப்பாடநெறியானது வழங்குகிறது. | 12 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: பி.ப.3:00-5:00<br>ஆரம்பம்: ஜனவரி 10<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்:<br>**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்** |

# தவணை 1 | 8 ஜனவரி – 6 ஏப்ரல் 2024

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| | |
|---|---|
| **திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்**<br>“திருத்தூதுப்பணி” எனும் வார்த்தையை அனைத்து கிறிஸ்தவர்களும் அறிந்திருந்தாலும், அதை குறித்த சரியான தெளிவின்மை இன்றும் காணப்படுகிறது. இப்பாடமானது திருத்தூதுப்பணி என்றால் என்ன என்பதை வரலாற்று ரீதியாக பல கோணங்களில் ஆராய்ந்து, ஏற்படும் சவால்கள் மத்தியில் தேவனின் திருத்தூதுப்பணியினை முன்னெடுப்பதற்கு நீங்களும், உங்கள் திருச்சபையும் தனித்துமான பங்களிப்பினை வழங்குவதற்கு தயார்படுத்துகிறது. | **BTh\|Dip கட்டாயம்**<br>11 வாரங்கள்<br>நாள்: வியாழன்<br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30<br>ஆரம்பம்: ஜனவரி 11<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்: **ஜூலியன் தேவதாசன்** |

| | |
|---|---|
| **கற்கை முறைகள்**<br>கொழும்பு இறையியல் கல்லூரியின் இறையியல் கல்வியானது உயர் தரத்தில் நடாத்தப்படுவதால், கல்விசார் அடிப்படை பண்புகளையும், பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் இப்பாடமானது விளக்குகிறது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும். | **BTh\|Dip கட்டாயம்**<br>11 வாரங்கள்<br>நாள்: வியாழன்<br>நேரம்: பி.ப.3:00-5:15<br>ஆரம்பம்: ஜனவரி 11<br>புள்ளிகள்: 0 (2)<br>விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்** |

| | |
|---|---|
| **பிரச்சினையில் உள்ள குடும்பங்களுக்கு உதவுதல்**<br>அனைத்து குடும்பங்களும் பல குறுகிய மற்றும் நீண்டகால நெருக்கடிக்களுக்கூடாக கடந்து செல்கின்றன. இப்பாடநெறியானது நீங்கள் எவ்வாறு குடும்பங்களுடன் இணைந்து, சிக்கலான மற்றும் சவாலான பிரச்சினைகளை தீர்க்க அவர்களுக்கு உதவ முடியும் என்பதையும், அவர்கள் பிரிந்து செல்லாமல் வலுவான குடும்பமாக வளர செய்வதற்கு உதவும் அவசியமான விடயங்களையும் ஆராய்கிறது. | **BTh\|Dip விருப்பு**<br>10 வாரங்கள்<br>நாள்: வெள்ளி<br>நேரம்: மு.ப.9:00-11:30<br>ஆரம்பம்: ஜனவரி 12<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்: **நிரஞ்ஜனி இராஜரட்ணம்** |

# தவணை 1 | 8 ஜனவரி – 6 ஏப்ரல் 2024

# வாரநாள், மாலைநேர வகுப்புகள்

## கலப்புமுறை கல்வி

### அப்போஸ்தலருடைய நடபடிகள்

**BTh|Dip விருப்பு**

பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள் என அழைக்கப்படும் இது ஆதி திருச்சபையின் அநேக வருட வரலாற்று சம்பவங்களை உள்ளடக்கிய புதிய ஏற்பாட்டின் பொக்கிஷமான நூலாகும். "கிறிஸ்தவர்கள்" எனும் அடையாளம், திருச்சபை சங்கம், அப்போஸ்தலரின் செயற்பாடுகள், திருத்தூதுப்பணியின் பரம்பல் உள்ளிட்ட அநேகவற்றின் ஆரம்பங்களை தன்னகத்தே கொண்டுள்ள இந்நூலானது இன்றைய திருச்சபைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அவசியமான பல விடயங்களை ஆராய்கிறது.

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: ஜனவரி 12

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**யொஹான் கிருஷ்ணகுமார்**

## பௌதீகநிலை கல்வி

### கிறிஸ்தவ உக்கிராணத்துவம்

**BTh|Dip விருப்பு**

கிறிஸ்தவ உக்கிராணத்துவமானது அனைத்தும் கடவுளுடையது, அனைத்தையும் அவரது மகிமைக்காக பயன்படுத்த வேண்டும் என்பதை உணர்ந்து வாழும் ஒரு வாழ்க்கை முறையாகும். இப்பாடநெறியானது எவ்விதம் ஒரு கிறிஸ்தவன் நன்றியுடனும், பொறுப்புடனும் தனது பொருட்களை, மூலவளங்களை, ஆற்றல்களை, தொடர்புகளை கடவுளுக்காக பயன்படுத்தலாம் என்பதை ஆராய்கிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஜனவரி 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

## இயங்கலை கல்வி

### யோசுவாவின் நூல்

**BTh|Dip விருப்பு**

பஞ்சாகம வரலாறின் தொடர்ச்சியாக இஸ்ரவேலர் மோசேயின் மரணத்தின் பின்னர் யோசுவா தலைமையில் வாக்குத்தத்த தேசமான கானானை வென்று அங்கு குடியேறிய சுமார் 30 ஆண்டுகால வரலாறை இந்நூல் கூறுகிறது. இப்பாடமானது யோசுவாவின் வாழ்க்கையில் இருந்து தேவனுக்கும், அவரது வார்த்தைக்கும் முழுமையாக கீழ்ப்படிதல், விசுவாச ஜெபவீரனாக இருத்தல், அடிமைத்தன வாழ்வு, பணியாளன், இராணுவத்தளபதி, தலைவன் என்ற பல பண்புகளை கற்றுக்கொள்வதற்கு உதவி செய்கிறது.

12 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஜனவரி 8

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**யோகநாதன் பகீரதன்**

தவணை 1 | 8 ஜனவரி – 6 ஏப்ரல் 2024

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

## ஆலோசனைப்பணிக்கான அறிமுகம்

**BTh|Dip கட்டாயம்**

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தமது அன்றாட வாழ்வில் பல வித குழப்பம், மனக்காயம், மனச்சிதைவு, துஷ்பிரயோகம் போன்ற பல உள, உணர்ச்சி பாதிப்புக்குள்ளான மக்களை சந்திக்க நேரிடுகிறது. அத்தகைய தேவையுள்ள மக்களது காயங்களை குணமாக்குவது கிறிஸ்தவர்களது முக்கிய பொறுப்பாகிறது. இப்பாடமானது ஆலோசனைப்பணிக்கான வேதாகம அடிப்படையையும், அறிவையும் உங்களுக்கு வழங்கி, அப்பணிக்கு உங்களை தயார்படுத்துகிறதாக அமைகிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: ஜனவரி 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

## ஆவிக்குரிய வரங்கள்

**BTh|Dip விருப்பு**

இன்று திருச்சபைகளில் ஆவிக்குரிய வரங்களை குறித்து அதிக ஆர்வமும் அநேக கருத்துக்களும் நிலவுகின்றன. இவற்றை குறித்த வேதாகம போதனைகளை புரிந்து பல்வேறுபட்ட வரங்களின் விளக்கங்களையும் பயனையும் பிரயோகத்தையும் ஆராய்வதற்கான அரியதோர் சந்தர்ப்பமாகும். உங்கள் வரங்களை அடையாளம் காணவும், கிறிஸ்துவிற்காக வல்லமையாக பிரகாசிக்கவும் இப்பாடமானது உறுதுணையாக அமையும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: ஜனவரி 11

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**எஸ். கதிரேசப்பிள்ளை**

## சிறுகுழுவொன்றை வழிநடத்தல்

**BTh|Dip விருப்பு**

அங்கத்தவர்களின் சாட்சியுள்ள வாழ்க்கை முறை மூலம் உயிருள்ள தேவ வார்த்தையின் வல்லமையை வெளிப்படுத்தக்கூடிய பலமும், செயற்திறனும் மிக்க சிறுகுழுக்களை கட்டியெழுப்புவதற்கு மாணவர்களை ஊக்குவிப்பதும், உதவுவதும் இப்பாடத்தின் நோக்கமாகும். இப்பாடத்தில் ஏன் ஒரு திருச்சபைக்கு சிறுகுழு ஊழியம் அவசியமானது, இதற்கான வேதாகம அடிப்படைகள் மற்றும் உபாயங்கள் எவை, இதனை எவ்வாறு அமைக்க வேண்டும், எப்படி வெற்றிகரமாக முன்கொண்டு செல்வது, ஆண்டவருடைய ஆணையை எப்படி சிறுகுழுவினூடாக நிறைவேற்ற முடியும், இதிலுள்ள சவால்கள் யாவை போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: ஜனவரி 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| | |
|---|---|
| **சங்கீதங்களை ஆராய்தல்**<br>வில்லியம் கமரென் என்பவர்,"சங்கீதக்காரன் ஆத்துமாவிற்கு ஒட்சிசனை வழங்குகிறார்" என்கிறார். கடவுளை குறித்தும், அவரை துதிக்கவும், துக்கங்களை அவரிடம் கூறுவதற்கான வழிகளை ஆராயவும் சங்கீதக்காரன் கூறும் விளக்கங்களை அனுபவித்து மகிழ்வதோடு, சங்கீத புத்தகத்திலுள்ள பல்தரப்பட்ட சங்கீதங்களை ஒழுங்கான முறையில் விளக்கவுரையுடன் கற்றுக்கொள்வதற்கு இப்பாடமானது உதவி செய்யும். | **BTh \| Dip விருப்பு**<br>11 வாரங்கள்<br>நாள்: வியாழன்<br>நேரம்: பி.ப.6:00-8:15<br>ஆரம்பம்: ஜனவரி 11<br>புள்ளிகள்: 2<br>விரிவுரையாளர்:<br>**காமினி ஜயந்த** |

# தவணை 2

# 6 மே – 3 ஓகஸ்ட் 2024

○ பௌதீகநிலை கல்வி | ☐ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 2 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ★ **பஞ்சாகமம்**<br>மு.ப.9:00-11:15<br>கே. யாபேஸ் | ○ **திருச்சபை நிர்வாகம்**<br>மு.ப.9:00-11:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **திருச்சபை வரலாறு I**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **பிரதான மதங்கள்**<br>மு.ப.9:00-11:30<br>ஜுலியன் தேவதாசன் |
| பிற்பகல் | ○ **1 மற்றும் 2 பேதுரு**<br>பி.ப.3:00-5:00<br>தனராஜ் அஜேந்திரன் | ★ **யாக்கோபு நிருபம்**<br>பி.ப.3:00-5:00<br>காமினி ஜயந்த | ○ **துர்உபதேசங்கள்**<br>பி.ப.3:00-5:00<br>ஸ்டன்லி நெல்சன் | ○ **வேதாகம அறநெறி**<br>பி.ப.3:00-5:15<br>இரா. ஹரிஹரன் | ○ **வேதாகம புவியியல்**<br>பி.ப.3:00-5:30<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா |
| மாலை | | | | | ☐ **தொழிற்துறையில் இறைபணி**<br>பி.ப.6:00-8:30<br>கிறிஸ்டி சாமுவேல் |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## நேர அட்டவணை: தவணை 2 (வட கொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **ஆவிக்குரிய போராட்டம்**<br>மு.ப.9:00-11:00<br>ஜூலியன் தேவதாசன் | | **மேய்ப்பத்துவ நிருபங்கள்**<br>மு.ப.9:00-11:15<br>இரா. ஹரிஹரன் | |
| மாலை | | **பணமும், உடமைகளும், இராஜ்யமும்**<br>பி.ப.6:00-8:00<br>வனஜா ராஜ்குமார் | | **சீஷத்துவம்**<br>பி.ப.6:00-8:15<br>கிறிஸ்துமணி செல்லையா | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# தவணை 2 | 6 மே – 3 ஓகஸ்ட் 2024

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

## 1 மற்றும் 2 பேதுரு

BTh|Dip விருப்பு

### பொறுப்புள்ள திருச்சபைகளை விருத்தி செய்தல்

இன்றைய இலங்கை திருச்சபைகளுக்கு துன்புறுத்தல், மற்றும் தவறான போதனைகள் என்ற இரு ஆபத்துக்கள் பெரும் அச்சுறுத்தலாக காணப்படுகிறது. பேதுருவின் இரு நிருபங்களும் இக்கருப்பொருள்களின் மத்தியில் உங்கள் பொறுப்பை எச்சரிப்பதோடு திருச்சபையை உண்மையுள்ளதாக இருக்கும் விதமாக வலுப்படுத்துவதற்கும் உங்களை தயார்படுத்துகிறதாக அமைகிறது.

12 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: மே 6

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **தனராஜ் அஜேந்திரன்**

## திருச்சபை நிர்வாகம்

BTh|Dip விருப்பு

திருச்சபையின் நிர்வாக பொறுப்பிலுள்ள சிலர் தமது பொறுப்புகளிலிருந்து தவறுவதால் அல்லது முறையற்று செயற்படுவதால் இன்று பல திருச்சபைகள் நெருக்கடிக்குள் சிக்குறுகின்றனர். இப்பாடமானது ஊழிய நிர்வாகம், நிதி, சொத்து நிர்வாகம் உள்ளிட்ட திருச்சபையின் அனைத்து நிர்வாகங்களையும் சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கான நிர்வாக யுக்திகளையும், இன்றைய திருச்சபை சூழலில் அவற்றை பிரயோகிப்பதை பற்றியும் கற்றுக்கொள்ள உதவுகிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: மே 7

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## பழைய ஏற்பாட்டிற்கான பின்னணி

BTh|Dip கட்டாயம்

பழைய ஏற்பாட்டின் நூல்களில் உள்ள பெறுமதியான, அழகான பின்னணியை இப்பாடத்தினூடாக விளங்கிக் கொள்வதோடு, பண்டைய கிழக்கிற்கு அருகாமையின் கலாச்சாரம், மதம், வரலாறு போன்றவற்றை ஆய்வு செய்து, பழைய ஏற்பாட்டை, புதிய வடிவில் கற்றுக்கொள்வதற்கு உதவுகிறது.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: மே 8

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **ஜூலியன் தேவதாசன்**

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### துர்உபதேசங்கள்

**BTh | Dip விருப்பு**

வேதாகம அடிப்படை சத்தியங்களை புரட்டுகின்ற தவறான உபதேசக்குழுக்களினால் அநேக கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்பட்டு தவறான போதனைகளுக்குள் வழிநடாத்தப்படுகின்றார்கள். இவ்வகை குழுக்களின் போதனைகளையும் அவர்கள் பயன்படுத்தும் அணுகு முறைகளையும் அறிந்துகொண்டு அதன் மூலம் கிறிஸ்தவ விசுவாசிகளை பாதுகாக்கவும் வழிநடத்துவதற்குமான அறிவை இப்பாடத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: மே 8

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **ஸ்டன்லி நெல்சன்**

### திருச்சபை வரலாறு I

**BTh | Dip கட்டாயம்**

**(கி.பி. 100 - கி.பி. 1517)**

திருச்சபையின் ஆரம்பம் முதல் சீர்திருத்தம் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இப்பாடமானது கி.பி.1 முதல் கி.பி.1400 வருடங்களில் திருச்சபையானது விரிவடைந்த விதங்கள், அதை வடிவமைத்த இறையியல்கள், திருச்சபை பிதாக்கள், இரத்தசாட்சிகள், துறவிகள், அருட்பணியாளர்கள், கிறிஸ்தவ இயக்கங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: மே 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### வேதாகம அறநெறி

**BTh | Dip கட்டாயம்**

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் குணாதிசயத்தை பிரதிபலித்து உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் திகழ அழைக்கப்பட்டவர்கள். இப்பாடமானது அறநெறி சார்ந்த நடைமுறை கேள்விகளை ஆராய்ந்து, வேதாகம அறநெறி கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்க்கையின் ஒவ்வொரு தெரிவுகளையும் செயல்களையும் இன்றைய கால நடைமுறை வாழ்க்கையில் பிரயோகித்து கிறிஸ்துவை பிரதிபலிப்பதற்கு வழிகாட்டியாக அமையும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:15

ஆரம்பம்: மே 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **இரா. ஹரிஹரன்**

# தவணை 2 | 6 மே – 3 ஒகஸ்ட் 2024

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### பிரதான மதங்கள்

BTh|Dip விருப்பு

இப்பாடமானது இலங்கையிலுள்ள பிரதான மதங்களான பௌத்தம், இந்து, இஸ்லாம் மதங்களின் கோட்பாடுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், இலங்கை கலாச்சாரத்தில் அவர்களது தனித்துவமான பங்களிப்பு உள்ளிட்ட அனைத்தையும் அறிந்து, பன்மத சூழலில் நல்லிணக்கத்தையும் பரஸ்பர மரியாதையும் மேம்படுத்துவதற்கூடாக பிற மதம் சார்ந்த உங்கள் நண்பர்கள், அயலவர்களுக்கு பொருத்தமான விதத்தில் நற்செய்தியை பகிர்ந்து கொள்வதற்கு பெரிதும் உதவியாக அமையும்.

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: மே 10

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### வேதாகம புவியியல்

BTh|Dip விருப்பு

வேதாகமம் முழுவதும் குறிப்பிடப்படுகிற அநேக இடங்களை குறித்த நமது அறிவு சொற்பமேயாகும். பாலஸ்தீனாவிலுள்ள அநேக இடங்கள், இயேசு வாழ்ந்த, ஊழியம் செய்த இடங்கள், பவுலினுடைய பிரயாணங்கள் மற்றும் அவர் அனுப்பிய கடிதங்கள் சென்ற இடங்கள் என வேதாகமத்தில் முக்கியமாக குறிப்பிடப்படும் பகுதிகளையும், அம்சங்களையும் உள்ளடக்கிய தேசப்படத்தை ஆராய்ந்து கற்றுக்கொள்ளவும், வேதாகமத்தின் உன்னதத்தன்மையை புரிந்து கொள்ளவும் இப்பாடமானது உதவி செய்யும்.

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: மே 10

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**மகேஸ்வரன் மாணிக்கராஜா**

## கலப்புமுறை கல்வி

### பஞ்சாகமம்

BTh|Dip விருப்பு

ஆதியாகமம் முதல் உபாகமம் வரையான நூல்கள் இதற்குள் அடங்குகிறது. தேவனின் திட்ட ஒழுங்குடனான கிறிஸ்தவத்தின் அடிப்படை நம்பிக்கைகளானது பஞ்சாகமத்திலேயே காணப்படுவதால் இதன் இறையியல் தன்மைகளை தெளிவாக அறிவதென்பது பலருக்கு கடினமாகவுள்ளது. இப்பாடமானது ஐந்து நூல்களையும் விளங்கிக்கொள்வதற்கான அடிப்படை கொள்கைகளை ஆராய்ந்து அதற்கூடாக இன்றைய நடைமுறை பிரயோகம் பற்றி ஆராய்கிறது.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: மே 13

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

## தவணை 2 | 6 மே – 3 ஒகஸ்ட் 2024

# வாரநாள், மாலைநேர வகுப்புகள்

### கலப்புமுறை கல்வி

## யாக்கோபு நிருபம்

BTh|Dip விருப்பு

சிறிதான இந்நிருபம் நடைமுறை வாழ்க்கை பிரச்சினைகளை குறித்த ஆழமான பார்வையை கொண்டது. கிறிஸ்தவனின் வாழ்க்கையின் உண்மையான நிலையை எச்சரித்து மெய்யான தேவ பக்தி, விசுவாசம், ஞானத்துடனான கிறிஸ்தவ வாழ்வை திருச்சபையிலும், தனிப்பட்ட ரீதியிலும் நடைமுறைப்படுத்தவும், முதிர்ச்சிக்கும், போதிப்பதற்கும் இப்பாடமானது வழிகாட்டுகின்றது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: மே 7

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

### இயங்கலை கல்வி

## தொழிற்துறையில் இறைபணி

BTh|Dip விருப்பு

அநேக கிறிஸ்தவ ஊழியங்கள் திருச்சபை, இல்லம் அல்லது விசேட நிகழ்வுகளோடும், திருச்சபை மக்களின் பெரும்பாலான நேரம் சந்தைவெளி எனப்படுகிற மதசார்பற்ற தொழில் ஸ்தாபனங்களில் பணியாற்றுவோரை சுற்றியும் செலவிடப்படுகிறது. நீங்கள் அதிக நேரம் செலவிடும் உங்கள் தொழில் ஸ்தாபனம் உள்ளிட்ட இடங்களிலுள்ள மக்களை கிறிஸ்துவிற்காக ஆதாயப்படுத்தும் பணியை செய்வதற்கான ஓர் தரிசனத்தை கொண்டிருப்பது முக்கியமானதோர் திறனாகும். இப்பாடமானது சந்தைவெளி ஊழியத்தை புரிந்து கொள்ளவும், அதில் ஈடுபடுவதற்குமான உந்துதலை அளிக்கிறது.

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: பி.ப.6:00-8:30

ஆரம்பம்: மே 10

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்டி சாமுவேல்**

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புக்கள்

### பௌதீகநிலை கல்வி

## ஆவிக்குரிய போராட்டம்

BTh|Dip விருப்பு

“ஏனெனில், மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல,... வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு” (எபே. 6:12). வேதாகமத்தில் தீமையும் திரளான அசுத்தாவிகளின் சேனைகளும் இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. திருச்சபையும் கிறிஸ்தவர்களும் இவ்வித ஆவிக்குரிய போராட்ட சூழ்நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்போராட்டத்தின் தன்மைகளை புரிந்துகொண்டு சாத்தானுடைய சதித்திட்டங்களில் வெற்றி பெறுவதற்கு இப்பாடமானது வழிகாட்டும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: மே 7

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

## மேய்ப்பத்துவ நிருபங்கள்

BTh|Dip விருப்பு

பவுலின் தீமோத்தேயு, தீத்து, பிலேமோன் நிருபங்களை ஆராய்கிறது. சபை தலைவர்களுக்கான பவுலின் கரிசனை மிகுந்த அறிவுறுத்தல்களை இந்நிருபங்களில் புரிந்து கொள்ளலாம். இதிலுள்ள சத்தியங்கள் இன்றைய தலைவர்களுக்கு திருச்சபையின் ஊழியத்தின் தரத்தை மேம்படுத்தி அதை வழிநடத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: மே 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

## பணமும், உடமைகளும், இராஜ்யமும்

BTh|Dip விருப்பு

இப்பாடமானது பணம், பொருட்கள் மீதான ஆசை, சேமிப்பு, முதலீடு செய்தல், கடன் வாங்குதல், செழிப்பின் உபதேசம், துறவறம் மற்றும் பரலோக வெகுமதிகள் போன்ற நடைமுறை விடயங்களுடன் தொடர்புடைய அநேக வேதாகம பகுதிகளை ஆராய்ந்து, கிறிஸ்தவ உக்கிராணத்துவத்தை குறித்த வேதாகம கண்ணோட்டத்தை தருகிறது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: மே 7

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

## சீஷத்துவம்

BTh|Dip கட்டாயம்

### 21ஆம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் வழியை பின்பற்றுவது எப்படி?

சீஷன் என்பவன் யார்? அவனுடைய குணாதிசயங்கள், அவன் எதிர்கொள்ளும் சவால்கள், ஆவிக்குரிய போராட்டங்கள், அவற்றை மேற்கொள்வது முறைகள் போன்ற விடயங்களை இப்பாடத்தில் ஆராய்வதுடன், கிறிஸ்தவ ஆவிக்குரிய வாழ்வின் முக்கியத்துவத்தையும் ஒவ்வொரு சீஷனுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உதவுகின்ற முக்கிய காரணிகளை குறித்தும் ஆராயப்படும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:15

ஆரம்பம்: மே 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

# தவணை 3

# 2 செப்டெம்பர் – 30 நவம்பர் 2024

○ பௌதீகநிலை கல்வி | □ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 3 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ **கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்**<br>மு.ப.9:00-11:30<br>மோகன் இதயகுமார் அழகக்கோன் | ○ **ஆதியாகமம்**<br>மு.ப.9:00-11:15<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜூலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **கிறிஸ்தவ வரலாறு II**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜூலியன் தேவதாசன்<br>○ **புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-11:30<br>வனஜா ராஜ்குமார் |
| பிற்பகல் | ○ **பன்முக சமூகத்தில் நற்செய்திப்பணி**<br>பி.ப.3:00-5:15<br>கே. யாபேஸ் | | ○ **தேவனும் உலகமும்**<br>பி.ப.3:00-5:00<br>கிறிஸ்துமணி செல்லையா | ○ **வாலிபர் ஊழியம்**<br>பி.ப.3:00-5:15<br>இரா. ஹரிஹரன் | |
| மாலை | ★ **ஊடக இறையியல்**<br>பி.ப.6:00-8:15<br>இரா. ஹரிஹரன் | | | □ **திருச்சபை நிறுவுதல்**<br>பி.ப.6:00-8:15<br>ஜேசன் செல்வராஜா | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 3 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **புதிய ஏற்பாட்டிற்கான பின்னணி**<br>மு.ப.9:00-11:15<br>வனஜா ராஜ்குமார் | | **நியாயாதிபதிகள்**<br>மு.ப.9:00-11:15<br>மோகன் இதயகுமார் அழகக்கோன் | |
| மாலை | | **கற்கை முறைகள்**<br>பி.ப.6:00-8:15<br>வனஜா ராஜ்குமார் | | **அதிர்ச்சிக்கு உள்ளானவர்களின் மன காயங்களை குணமாக்கல்**<br>பி.ப.6:00-8:15<br>வனஜா ராஜ்குமார் | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# தவணை 3 | 2 செப்டெம்பர் – 30 நவம்பர் 2024

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபம்

**BTh|Dip விருப்பு**

இந்நிருபத்தினை புரிந்து கொள்வதில் கிறிஸ்தவர்களும், திருச்சபைகளும் பெரும் சவால்களை இன்றைய காலத்திலும் எதிர்நோக்குகின்றனர். கொரிந்து திருச்சபையில் காணப்பட்ட திருச்சபை பிளவு, ஒழுக்க, கலாச்சார ரீதியான பிரச்சினைகள், விவாகரத்து, ஆவிக்குரிய கொடைகள் போன்ற பல பிரச்சனைகளுக்கான தீர்வின் படிப்பினைகளை இன்றைய சமகால திருச்சபைகளுக்கு முன்வைக்கிறதாக இப்பாடமானது அமைகிறது.

10 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: செப்டெம்பர் 9

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **மோகன் இதயகுமார் அழகக்கோன்**

### பன்முக சமூகத்தில் நற்செய்திப்பணி

**BTh|Dip கட்டாயம்**

வேறு மதங்களையும் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றும் மக்கள் மத்தியில் இயேசு மாத்திரமே இரட்சிப்பிற்கான ஒரே வழி என்ற சிறந்த தனித்துமான செய்தியை கிறிஸ்தவர்கள் அறிவிக்க முடியுமா? இந்த பாடநெறியானது சுவிசேஷத்தின் இருதய துடிப்பை உணர வைப்பதுடன் உங்கள் செல்வாக்குள்ள வட்டாரத்திற்குள் கிறிஸ்துவின் நற்செய்தியை தாக்கமுள்ள விதத்தில் பகிர்ந்து கொள்ளவும் உங்களை ஆயத்தப்படுத்தும்.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.3:00-5:15

ஆரம்பம்: செப்டெம்பர் 2

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **கே. யாபேஸ்**

### ஆதியாகமம்

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

ஆரம்பங்களின் புத்தகத்தை குறித்து ஆழமாக ஆராயப்படும். இப்பாடமானது உலகத்தின் ஆரம்பம், மனிதன், இஸ்ரவேல், பாவம், மீட்பு உள்ளிட்ட கருப்பொருள்களுடன் ஆதியாகமத்தின் சரித்திர, கலாச்சார பின்னணியில் அதன் விளக்கத்தையும், அதன் அமைப்பு, செய்தி ஆகியவற்றையும் ஆராயும்.

11 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 3

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## தவணை 3 | 2 செப்டெம்பர் – 30 நவம்பர் 2024

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

**BTh|Dip கட்டாயம்**

### கிறிஸ்துவின் ஆட்தத்துவமும் செயற்பாடும்

திருச்சபை வரலாறில் பல இறையியலாளர்கள் கிறிஸ்துவின் தெய்வீக, மனுஷீகம் தொடர்பான கேள்விகளுக்கான பதிலை பல நூற்றாண்டுகளாக முழுமையாக விபரிக்க முயற்சித்துள்ளனர். கிறிஸ்துவை குறித்தும், அவரது பண்புகள், குணாதிசயங்கள், தேவனோடு அவருக்குள்ள தெய்வீக உறவு, பழைய, புதிய ஏற்பாட்டில் அவரது செயற்பாடுகள், இன்றைய திருச்சபைகளில், கிறிஸ்தவர்களது வாழ்வில் அவர் செயற்படுகிறார் போன்றவற்றிற்கான விளக்கங்களை இப்பாடத்தில் ஆராயப்படும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: செப்டெம்பர் 4

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

**BTh|Dip கட்டாயம்**

### தேவனும் உலகமும்

இப்பாடமானது சமகால வாதங்கள், கிறிஸ்தவ சிந்தனையின் வரலாறு ஆகியவற்றை கிறிஸ்தவ அடிப்படையின் வெளிச்சத்தில் ஆராய்கிறதுடன் முறைப்படுத்தப்பட்ட இறையியல் ஆய்விற்கான அறிமுகமாகவும் காணப்படுகிறது. ஆண்டவருடைய குணாதிசயங்களும் அவருடைய தன்மைகளும், உலகம், மனிதனின் படைப்பு மற்றும் வீழ்ச்சி ஆகிய முக்கிய கருப்பொருள்களை வேதாகமத்தின் அடிப்படையில் புரிந்துகொள்ளும் ஓர் இறையியல் முயற்சியாகும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: செப்டெம்பர் 4

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

**BTh|Dip கட்டாயம்**

### கிறிஸ்தவ வரலாறு II

**(கி.பி. 1517 - கி.பி. 1900)**

சீர்திருத்தம் முதல் (1517) நவீன திருத்தூதுப்பணி இயக்கங்கள் (1900) வரையிலான காலகட்டத்தில் மேற்கத்தேய திருச்சபை வரலாற்றின் மாபெரும் சீர்திருத்தவாதிகள், மதிநுட்பமுள்ள இறையியலாளர்கள், பெருங்கூட்ட சுவிசேஷகர்கள், உலக தூதுப்பணி இயக்கங்கள் ஆகியவர்களால் திருச்சபையில் ஏற்பட்ட பரம்பல், தாக்கங்களை இப்பாடமானது ஆராய்வதோடு, வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய முக்கிய பாடங்களை ஆரோக்கியமான சபை வாழ்வை நோக்கி பிரயோகிப்பதற்கும் உதவி செய்யும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### வாலிபர் ஊழியம்

BTh | Dip விருப்பு

கடவுளுடைய மாபெரும் கட்டளையானது உலகம் முழுவதும் தலைமுறையாக நீடித்து செல்ல வேண்டியதொன்றாகும். உலகமயமாக்கலின் மத்தியில் வாலிபர்கள் இலகுவாக திசை மாறி செல்பவர்களாக இருந்தாலும், அவர்களின் குரலும் சக்தியும் மனித சமுதாயத்தின் தன்மையை புரட்சிகரமாக மாற்றக்கூடியதாகவும் உள்ளது. இப்பாடமானது வாலிபர்களின் ஆற்றல்கள், இளமைப்பருவத்தின் சவால்களை புரிந்து 14 முதல் 21 வயதுடையவர்கள் மத்தியில் நற்செய்தி அறிவிப்பு, சீஷராக்குதல் போன்ற விடயங்களை ஏற்படுத்துவதை ஆராய்கிறது.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:15

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

### புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

BTh | Dip கட்டாயம்

புதிய ஏற்பாட்டு நூல்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்பதை கற்றுக்கொள்வதோடு ஒவ்வொரு நூலினதும் எழுத்தாளர், முக்கிய செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள், சரித்திர பின்னணி மற்றும் தனித்துவங்களை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை பெற்றுக்கொள்ள இப்பாடமானது துணை புரியும்.

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: செப்டெம்பர் 6

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

## தவணை 3 | 2 செப்டெம்பர் – 30 நவம்பர் 2024

# மாலைநேர வகுப்புகள்

## இயங்கலை கல்வி

### திருச்சபை நிறுவுதல்

**BTh|Dip விருப்பு**

சபை நிறுவுதல் என்பது, ஒரு பிரதேசத்தில் புதிய திருச்சபைகளை உருவாக்குவதாகும். இப்பாடமானது ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ள முறைகளை ஆராய்ந்து அவற்றை நடைமுறை கலாச்சாரத்தில் மதிப்பீடு செய்கிறது. வலுவுள்ள, ஆரோக்கியமான, சூழமைவுக்கு ஏற்ற விசுவாசிகளின் சமூகங்களை ஸ்தாபிக்கும் பொருட்டு, சபை நிறுவுதல் இயக்கமொன்றை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான நடைமுறை சார்ந்த வழிகளை கற்றுக்கொடுக்கிறது.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.6:00-8:15

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**ஜேசன் செல்வராஜா**

## கலப்புமுறை கல்வி

### ஊடக இறையியல்

**BTh|Dip விருப்பு**

அரசியலை போன்றே கிறிஸ்தவர்களும் ஊடகங்களின் மீது எச்சரிப்புள்ளவர்களாக காணப்படுகின்றனர். இதன் விளைவாக, பகிரங்கமாக தேவ எச்சரிப்பை அறிவிக்கிற தனது தீர்க்கதரிசன பங்களிப்பை நிறைவேற்றுவதில் திருச்சபையானது வினைத்திறன் இழந்து காணப்படுகிறது. இப்பாடமானது தற்கால நவீன ஊடகங்களின் பல்பரிமாணத்துறைகளில், கிறிஸ்தவர்கள் உப்பாகவும் ஒளியாகவும் அர்த்தமுள்ள விதமாக ஈடுபடுவது எப்படியென்பதை காண்பிக்கிறது.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.6:00-8:15

ஆரம்பம்: செப்டெம்பர் 2

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

## தவணை 3 | 2 செப்டெம்பர் – 30 நவம்பர் 2024

# இளமாணிப்பட்டத்திற்கான கருத்தரங்கு பாடம்

## பௌதீகநிலை கல்வி

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுகலை பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இளமாணி பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 புள்ளிகளை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

### பிரதான இறையியல் பாரம்பரியங்களை ஆராய்தல்

**BTh கட்டாயம்**

கிறிஸ்தவ வரலாறின் மத்திய காலத்தில் தோற்றம் பெற்ற பல இறையியல்கள் கிறிஸ்தவ சமூகத்தை வரையறுத்தும், சிலசமயங்களில் பிரிவினையை ஏற்படுத்தியுமுள்ளன. இப்பாடமானது பல்வேறுபட்ட இறையியல் கொள்கைகளின் தோற்றம், பின்னணி, வளர்ச்சி, அதன் இறையியலாளர்கள், வேதாகம அடிப்படை, சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள், இன்றைய திருச்சபையில் அவை ஏற்படுத்தியுள்ள பலம், பலவீனம் போன்றவற்றை ஆராய்கிறது.

10 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: செப்டெம்பர் 6

புள்ளிகள்: 3

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

## தவணை 3 | 2 செப்டெம்பர் – 30 நவம்பர் 2024

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### புதிய ஏற்பாட்டிற்கான பின்னணி

**BTh|Dip கட்டாயம்**

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிற்கும் இடையிலான பரந்த காலகட்டமானது பல சுவாரஷ்யமான சம்பவங்களையும், விசேடமான நபர்களையும் கொண்டிருக்கிறது. கிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் உலகத்தினை உருவாக்கிய தனித்துவமான சம்பவங்கள், ஏற்பாடுகளுக்கிடையிலான யூத மதத்தின் தன்மை மற்றும் அதன் முக்கிய இயக்கங்கள், குறிப்பிடத்தக்க இலக்கியம், கலாச்சாரம் மற்றும் பாலஸ்தீன, உரோம சாம்ராஜ்யத்தின் கலாச்சாரம் போன்றவை இப்பாடத்தில் ஆராய்ந்து அறியப்படும்.

11 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 3

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

தவணை 3 | 2 செப்டெம்பர் – 30 நவம்பர் 2024

# CTS இன் வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### நியாயாதிபதிகள்

BTh|Dip விருப்பு

நியாயாதிபதிகளின் புத்தகமானது போராட்டம் நிறைந்த இஸ்ரவேலின் வரலாற்று பின்னணியை சார்ந்ததாகும். "ஒவ்வொருவரும் தங்களின் பார்வைக்கு சரியானதை செய்தார்கள்". வன்முறைகள், தந்திரங்கள் ஏமாற்றம் மற்றும் சாகசம் நிறைந்த இப்புத்தகத்தில் சிம்சோன் மற்றும் தெலீலாள், இடது கை பழக்கமுள்ள ஏகூத், நழுவும் வீரன் கிதியோன், மேலும் வீரச்செயல்களை செய்த அநேகரை குறித்து நாம் அறியலாம். தேவனுக்கு விசுவாசமாக இருப்பதற்கு நமக்குள்ள சவால்களையும், நமது பெலவீனங்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்க வேண்டும் என்பதையும் இப்பாடத்தில் அறிந்துகொள்ளலாம்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **மோகன் இதயகுமார் அழகக்கோன்**

### கற்கை முறைகள்

BTh|Dip கட்டாயம்

இறையியல் கல்வியின் உயர் பெறுமதியை கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்வி சார்ந்த அடிப்படை பண்புகளை கண்டறிவதற்கூடாக அறியுங்கள். இப்பாடமானது கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறிகளையும், அவற்றை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் குறித்து விளக்கம் அளிக்கின்றது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், ஒப்படை மற்றும் கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும்.

11 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:15

ஆரம்பம்: செப்டெம்பர் 3

புள்ளிகள்: 0 (2)

விரிவுரையாளர்: **வனஜா ராஜ்குமார்**

### அதிர்ச்சிக்குள்ளானவர்களின் மனக்காயங்களை குணமாக்கல்

BTh|Dip விருப்பு

மன அதிர்ச்சி என்பது இதயம் மற்றும் சிந்தனையின் காயமாகும். இது குணமாகுவதற்கு பல காலங்கள் ஆவதோடு, எமது வாழ்க்கையின் பல பகுதிகளையும் தாக்குகிறது. மன அதிர்ச்சி மற்றும் மனக்காய அனுபவங்களின் தாக்கத்தை புரிந்து, இவ்வலியிலிருந்து குணமடைவதற்கான பாதுகாப்பான இடத்தை வழங்குவதும், குணமாக்குதலின் பயணத்தின் மூலமாக மற்றவர்களை வழிநடத்தும் தலைவர்களை சிறந்த வளவாளர்களாக பயிற்சியளிப்பதுமே இப்பாடநெறியின் நோக்கமாகும். இங்கு உளவியலானது வேதாகமத்துடன் இணைந்ததாக காணப்படும்.

11 வாரங்கள்

நாள்: வியாழன்


நேரம்: பி.ப.6:00-8:15

ஆரம்பம்: செப்டெம்பர் 5

புள்ளிகள்: 2

விரிவுரையாளர்: **வனஜா ராஜ்குமார்**

# விரிவுரையாளர் விபரங்கள்



**எஸ். கதிரேசப்பிள்ளை,** BD, MTh

இவர் கல்குடா சுவிசேஷ பயிற்சி நிலையத்தின் அதிபராகவும் மெதடிஸ்த சபையின் வடகிழக்கு பிரதேச தலைவராகவும், திருப்பேரவை காரியதரிசியாகவும் கடமையாற்றியுள்ளார். நீண்டகாலமாக மெதடிஸ்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**வனஜா ராஜ்குமார்,** BTh

**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், வடகொழும்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வரும்** இவர் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினருமாவார். பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். சத்திய வசனம் நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவு நிர்வாக ஒருங்கிணைப்பாளராக நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**செல்லதுரை ஜோ. சந்ரசேகர்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரும், பட்டதாரியுமான இவர், கொரிய சர்வதேச இறையியல் கல்லூரியில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவம் என்ற பாடநெறியில் சான்றிதழை பெற்றவராவார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகருமாவார். அத்துடன் வடகொழும்பு போதகர் ஐக்கியத்தின் செயலாளர் நாயகமாகவும் கடமையாற்றுகிறார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin

**கொழும்பு இறையியல் கல்லூரியின் விரிவாக்கல் நிலையங்களின் முகாமையாளரான இவர்,** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றுள்ளதுடன், மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**ஜுலியன் தேவதாசன்,** BTh, MDiv

**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதியான இவர்,** சர்வதேச ஊழிய களங்களிலும் தூதுப்பணிகளிலும் பங்குக்கொள்வதோடு கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (AMBASSADORS FOR CHRIST INTERNATIONAL) என்ற சர்வதேச அமைப்பின் ஊழிய உறுப்பினராகவும் திகழ்கின்றார். கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பு (Abortion Survivors Network) என்ற சர்வதேச அமைப்பின் உறுப்பினரும் அதன் சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) பேச்சாளருமாவார். இரு தசாப்தங்களாக இறைபணியிலே ஈடுபட்டு கொண்டிருக்கிறார். இவர் சிலாபம், புனித யாக்கோபின் (St.James) திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்,** Dip (Counselling), BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் பட்டச்சான்றிதழை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும், தெமட்டகொட, கிரேஸ் வேதாகம நிறுவனத்தின் வேதாகம கல்வி ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றார்.



**நிரஞ்ஜனி இராஜரட்ணம்,** HND (Counselling), BTh, MSc (candidate)

கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியும், பகுதி நேர கல்விப்பீட உறுப்பினருமான இவர் தற்போது மருத்துவ உளவியல் முதுமாணி பட்டப்படிப்பினை கற்றுக்கொண்டிருக்கிறார். World Vision Sri Lanka நிறுவனத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வருகிறார். The Salvation Army Sri Lanka தலைமையகத்தில், சிறுவர் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான அறிவுரை ஆலோசகராகவும் மற்றும் Wesley Collegeஇல் மாணவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். Child Rights Activistஆக இருப்பதுடன், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் இணைந்து ஆலோசகராக பணிபுரிந்து வருகின்றார்.



**யொஹான் கிருஷ்ணகுமார்,** BTh, MTh

நோர்ட்டன் பிரிட்ஜ் SAIT கலாசாலையில் இளமாணி பட்டத்தையும் வேல்ஸ்ஸின் Bangor பல்கலைக்கழகத்தில் நடைமுறை இறையியலில் முதுமாணி பட்டத்தையும் Global Institute of Theology (WCRC)இல் சீர்திருத்த இறையியல் பட்டத்தையும் பெற்ற இவர் கண்டி City Mission நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளராகவும், உள்ளூர் மற்றும் வெளியூர் வேதாகம கலாசாலைகளில் விரிவுரையாளராகவும், தனது உள்ளூர் திருச்சபையில் இளைஞர் ஊழிய பணியாளராகவும் மூப்பராகவும் சேவையாற்றுகின்றார். கண்டி, பிரஸ்படேரியன் திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்




**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை சபையின் கல்வி இணைப்பாளராகவும், சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**யோகநாதன் பகீரதன்,** BA (Hons), MA
யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்கள் ஐக்கியத்துடன் (FOCUS) இணைந்து பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்கள் மத்தியில் பணியாற்றி வருகிறார். இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள சீயோன் திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்ரி பாலேந்திரன்,** Certificate in Counselling CWR-UK, BD, MA (candidate)
இவர் சேராம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமாவார். இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**காமினி ஜயந்த,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், Ragama, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church இல் துணை போதகராகவும், தனது ஆராதிக்கும் சபையாகவும் கொண்டுள்ளதுடன், தற்போது Infinity Centre for Higher Studies(இலங்கை)-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றுகிறார். அத்துடன் இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார். அத்துடன் கொழும்பு இரட்சண்ய சேனையில் பகுதி நேர விரிவுரையாளராக கடமையாற்றுவதுடன், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் முதுமாணி பட்டப்படிப்பையும் தொடர்கிறார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**தனராஜ் அஜேந்திரன்,** BTh, MA
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், கடந்த 13 வருடங்களாக வெள்ளவத்தை கிளையில் ஆரம்ப பணியில் ஈடுபட்டவருமாவார். தற்போது மலையகத்தில் ஹட்டன் பகுதியில் அருட்பணி ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார். திருச்சபை ஸ்தாபித்தல், சீஷத்துவம், வாலிபருக்கான பயிற்சி மற்றும் இறையியல் கல்லூரிகளில் கற்பித்தல் பணிகளில் தன்னை அர்ப்பணித்துள்ளார்.



**ஞா. ஸ்டன்லி நெல்சன்,** BTh, MMin
கொழும்பு இறையியல் கல்லூரியிலும் அதன் யாழ்ப்பாண கல்வி நிலையத்திலும் முன்னாள் பகுதி நேர விரிவுரையாளராக சேவையாற்றியுள்ள இவர் சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியின் இளமாணி மற்றும் முதுமாணி பட்டதாரியாவார். இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணியின் முன்னாள் தலைவராகவும், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையின் முன்னாள் தலைவராக பணியாற்றியுள்ளதுடன், தற்போது அத்திருச்சபையின் செயலாளராகவும், அதன் இறையியல் கல்வியகத்தின் அதிபராகவும், தெஹிவலை சபையின் போதகராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் திருச்சபை ஒருமைப்பாட்டுக்கான ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமாவார்.



**மகேஸ்வரன் மாணிக்கராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**கே. யாபேஸ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் AOG திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாகவும், அதன் போதகராகவும் பணியாற்றுவதுடன், திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் தலைமைத்துவ பயிற்சியளித்தல், வேதாகம கல்லூரியில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**கிறிஸ்டி சாமுவேல்,** EPCM, BE, MA

Mission to Asia (இந்தியா), Infinity Centre for Higher Studies (இலங்கை) ஆகியவற்றின் ஸ்தாபக இயக்குனராவார். இந்தியாவின், எம்.கே பல்கலைக்கழகம் (கணணி விஞ்ஞான தொழிநுட்பவியல் [BE]), புனித. பவுல் இறையியல் கல்லூரி (பிரயோக இறையியலில் முதுமாணி), மார்ட்டின் லூத்தர் பல்கலைக்கழகம் (கிறிஸ்தவ முகாமைத்துவ கற்கைநெறி) போன்றவற்றில் பட்டம் பெற்றவராவார். தெற்காசியாவின் பல்தரப்பட்ட திருத்தூதுப்பணி செயற்பாடு அமைப்புகளின் உறுப்பினரும், இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் அமைப்பு நிர்வாகக்குழுவின் அங்கத்தவருமாவார் (கல்விப்பிரிவு). வெள்ளவத்தை, மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொணடுள்ளார்.



**மோகன் இதயகுமார் அழகக்கோன்,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கிறிஸ்துவுக்காக இளைஞர் ஸ்தாபனத்தில் பயிற்சி நிர்வாக இயக்குனராகவும், சப்பிரகமுவா, களுத்துறை பிரிவுகளுக்கு ஊழிய பொறுப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார். கடந்த 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கொழும்பு பகுதிகளில் இளைஞர்கள் மத்தியில் ஊழியம் செய்வதுடன் இளம் தலைவர்களுக்கு பயிற்சி கொடுப்பவராகவும் பணியாற்றுகிறார். இவர் வெள்ளவத்தை, மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**ஜேசன் செல்வராஜா,** BTh

கொழும்பு இறையியல் கல்லூரியின் முன்னாள் கல்விப்பீட உறுப்பினரான இவர், AOG கைதடி சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகராகவும் சேவையாற்றுகிறார். அத்துடன் “Simply mobilizing SL” இன் தேசிய இணைப்புக்குழுவின் அங்கத்தவராகவும், சிவில் உரிமை அமைப்பாகிய யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் அங்கத்தவருமாவார்.

# CTS கற்கைநெறிகள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு கற்கைநெறிக்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி மூன்று மட்டங்களில் கற்கைநெறிகளை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய கற்கைநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கை பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21ஆம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த புள்ளிகள்: 36*

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்: சிறுவர் ஊழிய களம் (CCS-CM)**
திருச்சபைக்கும் சமூகத்திற்குமான செயற்திறன் மிக்க சேவையாளர்களை பயிற்றுவிப்பதற்காகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம்
*தேவைப்படும் மொத்த புள்ளிகள்: 36*
*இயங்கலை மூலமாக கற்பித்தல் இடம்பெறும்*

**இறையியல் பட்டச்சான்றிதழ் (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த புள்ளிகள்: 72*

**இறையியல் இளமாணிப்பட்டம் (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த புள்ளிகள்: 108*

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம்
011-2890809; registrar@cts.lk; www.cts.lk

**வடகொழும்பு கல்வி நிலையம்:**
0771415670; nc@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**பாடநெறிகள்:**

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
- ஒவ்வொரு பாடப்புள்ளிகளும் 2 மணித்தியாலங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

| | பாடங்கள் | புள்ளிகள் |
|---|---|---|
| கட்டாய பாடங்கள் | | |
| வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள் | 04 | 08 |
| சிறுவர் ஊழிய பாடங்கள் | 04 | 08 |
| விருப்புப்பாடங்கள் | 10 | 20 |
| கருத்தரங்குகள் | 04 | 00 |
| மொத்தம் | 22 | 36 |

கவனிக்கப்பட வேண்டியது: சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு மேலே உள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

- **இயங்கலை:** Zoom வழியாக பாடங்கள் நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.

**மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:**

ஒருங்கிணைப்பாளர் : சிறுவர் ஊழிய களம்
திருமதி. கிறிஷ்ணி எதிரிசிங்க cm@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்**

சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

**கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்**

பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

**விருப்புப்பாடங்கள்**

துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
சிறுவர்களுக்கான கிறிஸ்தவ கல்வி நிகழ்ச்சிகளை வடிவமைத்தல்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் சிறுவர் ஊழிய களத்தின் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.







## CTS நூலகம்

**40000 புத்தகங்களுக்கும்**
மேற்பட்ட நூலக சேகரிப்புகளை கொண்டுள்ளது

CTS நூலகமானது
அதிக ஆழமாக
தேவனுடைய வார்த்தையை
கற்றுக்கொள்ள விரும்பும்
ஒவ்வொரு கிறிஸ்தவ
ஆர்வலருக்குமான
விலைமதிப்பற்ற வளமாகும்!

இன்றே CTS நூலகத்தில் அங்கதத்தவராக இணைந்து கொள்ளுங்கள்!

**மேலதிக விபரங்களுக்கு:**
2890809 library@cts.lk

**CTS நூலகம் அனைத்து திருச்சபைகளுக்கும் திறக்கப்பட்டுள்ளது**




189 துடுகமுனு வீதி, கொஹுவலை | 011 5524257 | registrar@cts.lk | www.cts.lk